நாள்: 22.08.2025

O.S. No. 4/2023

பெயர்: மெகரஜ்கனி க/பெ. செய்யது இஸ்மாயில்

வா.சா.1

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :—</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். அசல் வழக்கு எண். 12/2014 ல் உள்ள எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் கூறியது யார் என்றால் நான் கூறவில்லை. அந்த வழக்கில் நான் கூறி தான் வழக்கறிஞர் ராஜ்குமார் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எதிராக வழக்கு தீர்ப்பான விவரத்தை நான் எப்போது தெரிந்துக்கொண்டேன் என்றால் வருடம் சரியாக நினைவில்லை 2000 ம் ஆண்டிற்கு மேல் தான் தெரிந்துக்கொண்டேன். இவ்வழக்கில் அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் உண்டா என்றால் பூர்வீகமாக அனுபவித்து வருவதால் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் புல எண் எனக்கு தெரியாது விஸ்தீரணம் 20 சென்ட் ஆகும். 20 செண்ட் ன் நீள அகலம் மற்றும் நான்கெல்லை என்ன என்றால் தெரியாது. இவ்வழக்கின் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் உள்ள விவரங்களை கூறியது யார் என்றால் எனது தம்பி கூறினார். வழக்கு சொத்தை பொருத்து உரிமை கோரும் ஆவணங்கள் எவை உள்ளதென்றால் பட்டா, சிட்டா ஆகும். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதைப்பற்றிய விவரங்கள் எனது தம்பிக்குதான் தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையிலுள்ள விவரங்கள் படித்து பார்த்து கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலுள்ள னவிவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்து தொடர்பாக பிரதிவாதி இப்ராஹிம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நானும் எனது சகோதரரும் பிரதிவாதி இப்ராஹிமை இடையூறு செய்யக்கூடாதென்று நாங்கள் உத்தரவாதம் கொடுத்ததன் அடிப்படையில் அவ்வழக்கு முடிக்கப்பட்டதென்றால்

சரியல்ல. வழக்கு சொத்து யாருக்கு சொந்தம் என்றால் ஜிம்மாகான், ஜாஹிர் உசைன், அசைன் முகமது, மெகரஜ்கனி, சாகுல் ஹமீது, ரசூல் பீவி ஆகியோருக்கு சொந்தம். மேற்கண்ட நபர்களுக்கு சொத்தில் உரிமையுள்ளதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை அளக்க வரும்போது சட்டப்படி தொகை செலுத்தி அளவை மேற்கொண்டார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் அளக்கவிடாமல் தடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு தடுத்தது தொடர்பாக எங்கள் மீது போலிசில் புகார் அளித்தார்களா என்றால் அளித்தார்கள். அளவை மேற்கொண்ட பிறகு கல் பதித்தார்களா என்றால் இல்லை. ஊன்றிய கல்லை பிடிங்கியது யார் என்றால் எனது தம்பி சாகுல் ஹமீது பிடிங்கினார். வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் நானும் எனது குடும்பத்தாரும் தான் 1 ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை அனுபவிக்க விடாமல் இடையூறு செய்கிறோம் என்றால் சரியல்ல. ஏற்கனவே தொடர்ந்த வழக்கு விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும் அவ்வழக்கில் எங்களுக்கு எதிராக தீர்ப்பாணதால் அதனை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் அவ்வழக்கின் வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்திவிட்டு தற்போது எதுவும் தெரியாது என பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் எந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்டட தீர்ப்பை ரத்து செய்ய கோருகிறேன் என்றால் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.12/2014 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் தொடர்பான தீர்ப்பை தான் நான் ரத்து செய்ய கோருகிறேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது, அந்த தீர்ப்பை நான் பார்த்ததே இல்லை. நான் தீர்ப்பை ரத்து செய்ய கோரியுள்ள நிலையில் அந்த ரத்து செய்யப்பட வேண்டிய தீர்ப்பின் நகலை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் உண்டா என்றால் இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.29 09:31:49 +0530